**KPR IAS Academy**

Learn Beyond

Institute for IAS, IPS, IFS and TNPSC Exams

No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

**மாமல்லபுரத்தில் அமைந்துள்ள வராகப் பெருமாள் கோயில், 7-ம் நூற்றாண்டில் பல்லவர்களால் கட்டப்பட்ட தனித்துவமான குடைவரை கோயில். இது, யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.**



CHENNAI

**1 கோடி**

கொல்லிமலைப் பகுதியின் அரியூர் சோலைக் காட்டில் ரூ.1,00,00,000 செலவில் அமைக்கப்பட்டுள்ள இரவு வான் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

CHENNAI



**பொது அறிவு:** தமிழ்நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரம், சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த பனை மரமே மாநில மரமாகும். இது அறிவியல் பூர்வமாக Borassus flabellifer என்று அழைக்கப்படுகிறது. இது இயற்கைப் பேரிடர்களைத் தாங்கி நிற்கும் வலிமை கொண்டது.

# தமிழக ரயில்வே திட்டங்களுக்கு நிதி 9 மடங்காக அதிகரிப்பு

## மதுரையில் நடந்த அரசு விழாவில் பிரதமர் மோடி தகவல்

மதுரை

தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் - புதுச்சேரி நான்கு வழிச்சாலை, பரமக்குடி - ராமநாதபுரம் நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லிபுத்தூர், திருவாரூரில் மறுசீரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் திறப்பு விழா, சென்னை கடற்கரை-எழும்பூர் 4-வது ரயில் வழித்திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா ஆகியவை மதுரையில் நேற்று நடைபெற்றது.

இத்திட்டங்களைத் தொடங்கி வைத்து பிரதமர் பேசியதாவது:

புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக கருதுகிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சி அம்மனுக்கும், சுந்தரேசுவரருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. ரூ.4,500 கோடி மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014-ம் ஆண்டிலிருந்து தற்போது வரை 4,000 கி.மீ. தூரத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று 2 பெரிய தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மரக்காணம் - புதுச்சேரி நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் தமிழ்நாடு - புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் மேம்படும். பரமக்குடி - ராமநாதபுரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேசுவரத்துக்கு புனிதப் பயணம் மேற்கொள்வோர், விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்து மேம்படும்.

தமிழக ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பின்பு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது. 2026- 2027-ம் நிதியாண்டில் ரூ.7,600 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் 1,300 கி.மீ. புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிவடைந்துள்ளன. கடந்த ஆண்டு பாம்பன் புதிய ரயில் பாலம் திறக்கப்பட்டது.

தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்படுகின்றன. கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தமிழக உள் கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்த பட்ஜெட்டில் சென்னை - பெங்களூரு, சென்னை - ஹைதராபாத் புல்லட் ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு வளமான வரலாறு மற்றும் மரபுக்குச் சொந்தமான மாநிலம். உலக அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக ஆதிச்சநல்லூர் மாற்றப்படும். புலிகாட் ஏரி, பொதிகை மலைப்பகுதியில் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

நாடு முழுவதும் 200 தொழில் துறை தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உற்பத்திப் பணிகள் ஊக்குவிக்கப்படும். இதில் தமிழகத்திலும் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் தமிழக இளைஞர்கள் பலனடைவார்கள். 2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வில் ஒவ்வொரு இந்தியரும் உள்ளனர். நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

முன்னதாக மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பேசும்போது, 'பிரதமர் மோடி தமிழக மக்கள், தமிழ் மொழி, கலாச்சாரத்தின் மீது அதிக பற்று வைத்துள்ளார். இதனால்தான் உலகம் முழுவதும் திருக்குறள் கலாச்சார மையம் திறந்து வருகிறார். திருக்குறளை 35-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுத்துள்ளார். இது வரை தமிழகத்துக்கு ரூ.12 லட்சம் கோடி நிதியை வழங்கியுள்ளார்' என்றார்.


இந்நிகழ்வில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் எ.வ. வேலு, அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல், மறுசீரமைக்கப்பட்ட ரயில் நிலையங்கள் திறப்பு உள்பட பல்வேறு திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். உடன் ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய இணை அமைச்சர் முருகன், அமைச்சர் எ.வ.வேலு, எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்.

## வருமான வரி செலுத்துவதில் முன்னிலை வகிக்கும் நாட்டு மக்கள்

உலகிலேயே அதிகபட்சமாக நார்வே நாட்டு மக்களில் 93.4% பேர் வருமான வரி செலுத்துகின்றனர். ஆஸ்திரேலியா (91.7%), கனடா (78.8%) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா (5.3%) உள்ளிட்ட நாடுகளின் பட்டியல் வருமாறு:






எஸ்.கல்யாணசுந்தரம்
ஓய்வு பெற்ற வங்கியாளர்
1952kalsu@gmail.com




இப்போது நடைமுறையில் உள்ள வருமான வரிச் சட்டம் 1961-ல் இயற்றப்பட்டது. இது கடந்த 65 ஆண்டுகளாக அமலில் உள்ளது. இது மிகவும் பழமையானதாகவும், சிக்கலான சட்ட வார்த்தைகளைக் கொண்டதாகவும் இருந்ததால், அதனை எளிமைப்படுத்தி நவீன காலத்துக்கு ஏற்ப மாற்றவே புதிய வருமான வரிச் சட்டம் 2025-ல் இயற்றப்பட்டது. இது வரும் ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வருகிறது.

தேவையற்ற குழப்பங்களையும் வரி தொடர்பான வழக்குகளையும் குறைப்பது, டிஜிட்டல் பொருளாதாரத்தை முறைப்படுத்துவது மற்றும் வரி செலுத்துவோர் எளிதாகப் புரிந்து கொண்டு தாமாகவே முன்வந்து வரி செலுத்தும் சூழலை உருவாக்குவதுதான் இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்த நடைமுறையின் அடுத்தகட்டமாக மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) 2026 பிப்ரவரி 7-ம் தேதி 'வரைவு வருமான வரி விதிகள், 2026' (Draft Income Tax Rules, 2026) என்ற ஆவணத்தை வெளியிட்டது. இந்த வரைவு விதிகள் குறித்து வரி நிபுணர்கள், தொழில்முறை ஆலோசகர்கள், தொழில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் தங்கள் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை தெரிவித்துள்ளனர். கூடிய விரைவில் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்பட்டு புதிய விதிகள் அமலுக்கு வர உள்ளன.

**வரைவு விதிகள் - 2026 என்றால் என்ன?**

ஒரு வருமான வரி சட்டம் இயற்றப்படும்போது, அதன் கீழ் பின்பற்ற வேண்டிய குறிப்பிட்ட நடைமுறைகள், வரம்புகள், படிவங்கள், மதிப்பீட்டு முறைகள் போன்ற விரிவான விவரங்கள் 'விதிகள்' (Rules) மூலம் வழங்கப்படுகின்றன. இவ்வாறு சிறு சிறு செயல்முறை விவரங்களை சட்டத்திலேயே சேர்த்தால் அது மிக நீளமானதாகவும் சிக்கலானதாகவும் மாறும். ஆகையால், சட்டம் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க, அதனுடன் இணைந்த விதிகள் தனியாக அறிவிக்கப்படுகின்றன.

இதன்படி, சட்டம் நிறைவேற்றப்பட்ட பின், அதனுடன் தொடர்புடைய பிரிவுகளுக்கு தேவையான விதிகள் வெளியிடப்படுவது வழக்கம். ஆனால், விதிகளை இறுதி செய்யும் முன் அரசு அவற்றின் 'வரைவு' பதிப்பை வெளியிட்டு, நிபுணர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் பெறப்படும். அந்த வகையில் வரைவு வருமான வரி விதிகள் வெளியிடப்பட்டு கருத்துகள் பெறப்பட்டுள்ளன.

**எப்போது அமலுக்கு வரும்?**

புதிய வருமான வரி விதிகள், 2025-ம் ஆண்டுக்கான வருமான வரி சட்டத்துடன் சேர்த்து 2026 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, 2026–27 நிதியாண்டு முதல் இந்த விதிகள் நடைமுறைக்கு வரும்.

**முக்கிய மாற்றங்கள்**

1. **படிகள் (Allowance) மற்றும் கூடுதல் சலுகைகள் (Perquisite) மதிப்பீட்டு விதிகள்:**

   நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மாற்றமாக, பணியாளர்களுக்கான பல்வேறு படிகள் மற்றும் சலுகைகளின் வரம்புகள் தற்போதைய சந்தை நிலை மற்றும் பணவீக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு உயர்த்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கீழ்வரும் மாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

   **விடுதி படிகள்:** மாதம் ₹300 லிருந்து ₹9,000 ஆக உயர்வு.

   குழந்தைகள் கல்வி படி: மாதம் ₹100 லிருந்து ₹3,000 ஆக உயர்வு.

   **இலவச உணவு:** ஒரு உணவுக்கு ₹50 லிருந்து ₹200 ஆக உயர்வு.

   **பணமில்லா பரிசுகள்:** ஆண்டுக்கு ₹5,000 லிருந்து ₹15,000 ஆக உயர்வு.

   **1.6 லிட்டருக்கு குறைவான இன்ஜின் கார் குத்தகை:** சலுகை மதிப்பு ₹1,800 + டிரைவர் ₹900 என்பதிலிருந்து ₹5,000 + ₹3,000 ஆக உயர்வு.

   **1.6 லிட்டருக்கு மேற்பட்ட கார் குத்தகை:** ₹2,400 + ₹900 என்பதிலிருந்து ₹7,000 + ₹3,000 ஆக உயர்வு.

   **வெளிநாட்டு சிகிச்சை செலவு:** ஆண்டு வருமானம் ₹2 லட்சத்துக்கு குறைவானவர்களுக்கு மட்டுமே வரி விலக்கு இருந்தது. இது ₹8 லட்சம் ஆக உயர்வு.

2. **நிரந்தர கணக்கு எண் (பான்) குறிப்பிடும் அவசியம் மற்றும் பண வரம்புகள்:**

   சில பரிவர்த்தனைகளில் பான் குறிப்பிட வேண்டிய பண வரம்புகள் மாற்றப்பட்டுள்ளன:

   **வாகன விற்பனை/கொள்முதல்:** ₹5 லட்சத்தை மீறினால் பான் எண் தெரிவிப்பது கட்டாயம் (இப்போது இருசக்கர வாகனங்களும் சேர்க்கப்பட்டுள்ளன; டிராக்டர்கள் விலக்கு பெறுகின்றன).

   ஹோட்டல்/உணவகத்தில் பணம் செலுத்துதல்: ஒரு முறை ₹50,000 லிருந்து ₹1,00,000 ஆக உயர்வு.

   **நிலச்சொத்து பரிவர்த்தனை:** ₹10 லட்சத்திலிருந்து ₹20 லட்சம் ஆக உயர்வு.

   வங்கி/அஞ்சலக பணம் பெறுதல்: ஆண்டுக்கு ₹20 லட்சம் என்பதிலிருந்து ₹10 லட்சம் ஆக குறைப்பு.

3. **பிற முக்கிய மாற்றங்கள்**

   நிலச்சொத்து தொடர்பான நிதி பரிவர்த்தனை அறிக்கை வரம்பு ₹30 லட்சத்திலிருந்து ₹45 லட்சம் ஆக உயர்வு.

   தொழில்முறை நபர்களுக்கு கையால் எழுதும் கணக்கு புத்தகங்களுக்கு பதிலாக கட்டாய டிஜிட்டல் புத்தகங்கள்.

   மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (CBDC) (e-Rupee) செல்லுபடியாகும் மின்னணு பரிவர்த்தனை முறையாக அங்கீகரிக்கப்படுகிறது.

**பழைய வரி முறை vs புதிய வரி முறை**

வரி செலுத்துபவருக்கு பழைய வரி முறை சிறந்ததா அல்லது புதிய வரி முறை சிறந்ததா என்பது அவரின் வருமானம் மற்றும் கழிவுகள்/விலக்குகள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. தற்போது படிகள் மற்றும் கூடுதல் சலுகைகளுக்கான வரம்புகள் அதிகரிக்கப்படும்போது, சிலருக்கு பழைய வரி முறை மீண்டும் பயனுள்ளதாக மாறும் வாய்ப்பு உள்ளது. எனவே, வரி செலுத்துவோர் இந்த மாற்றங்கள் செயல்வடிவம் பெறும்போது இரண்டு முறைகளையும் அனுசரித்து பயனுள்ளதை ஏற்பது நல்லது.

# புதிய ஜிடிபி கணக்கீட்டு முறை துல்லியத்தை நோக்கிய மாற்றம்



முனைவர்
எஸ்.பாலசுப்ரமணியன்
பேராசிரியர்,
மயிலம் பொறியியல் கல்லூரி
balu910@gmail.com

நாட்டின் பொருளாதார வலிமையையும், மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தையும் துல்லியமாக அளவிடும் ஒரு 'மதிப்பெண் அட்டையாக' மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) விளங்குகிறது. இந்தியப் புள்ளியியல் அமைச்சகம் இக்கணக்கீட்டுக்கான அடிப்படை ஆண்டை 2022-23 ஆக மாற்றியுள்ளது. கரோனா தொற்று பாதிப்புக்குப் பிந்தைய ஒரு சீரான நிதியாண்டாக இது கருதப்படுவதால், வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கான நிலையான 'அங்கீகார ஆண்டாக' (Base Year) இது தேர்வு செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் விலைகள் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கும் என்பதால், ஒரு குறிப்பிட்ட ஆண்டின் விலையைத் தரமாக வைத்தே நாட்டின் உண்மையான வளர்ச்சி கணக்கிடப்படுகிறது.

**துல்லியமான கணக்கீட்டு முறை**

இப்புதிய முறையில் 'இரட்டை விலைக் குறைப்பு' (Double Deflation) முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முன்னதாக இருந்த 'ஒற்றை விலைக்குறைப்பு' முறையில், ஒரு தொழிற்சாலையின் விற்பனைப் பொருளின் விலை உயர்வு மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டது. உதாரணமாக, ஒரு காலணி தொழிற்சாலை தனது தயாரிப்பு விலையை 10% உயர்த்தும்போது, அதன் மூலப்பொருளான தோலின் விலை 50% உயர்ந்திருக்கலாம். பழைய முறையில் இந்த மூலப்பொருள் விலை மாற்றம் விடுபட்டதால், உண்மையான லாபம் மற்றும் வளர்ச்சியைத் துல்லியமாகக் கணக்கிடுவதில் சிக்கல் இருந்தது. தற்போது உற்பத்திப் பொருள் மற்றும் மூலப்பொருள் ஆகிய இரண்டின் விலை மாற்றங்களும் தனித்தனியாகச் சரிசெய்யப்படுவதால், உற்பத்தித் துறையின் 'உண்மையான மதிப்பு' (Real Value Added) தெளிவாகத் தெரியவரும்.

**தரவு மற்றும் டிஜிட்டல் விரிவாக்கம்**

பொருளாதாரத்தில் வெறும் விலை உயர்வினால் ஏற்படும் 'போலி வளர்ச்சியைத்' தவிர்த்து, உற்பத்தி அளவின் உண்மையான அதிகரிப்பைக் கண்டறியப் பணவீக்கச் சரிசெய்தல் (Inflation Adjustment) அவசியமாகிறது. இதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களின் எண்ணிக்கை 180-லிருந்து 600-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் சிமெண்ட் போன்ற அடிப்படைப் பொருட்களுடன், நவீன மின்னணு சாதனங்கள் மற்றும் ரசாயனங்கள் இணைக்கப்பட்டுள்ளன. வெறும் அனுமானங்களைத் தவிர்த்து, ASUSE (சிறு நிறுவனங்கள் ஆய்வு) மற்றும் PLFS



(தொழிலாளர் சந்தை ஆய்வு) போன்ற நேரடி ஆய்வுகள் மூலம் முறைசாரா பொருளாதாரத்தின் பங்களிப்பு கணக்கிடப்படுகிறது. இதனுடன் 'இ-வாஹன்' மற்றும் PFMS போன்ற டிஜிட்டல் தரவுகள் இணைக்கப்படுவது தரவுகளின் நம்பகத்தன்மையை அதிகரிக்கிறது.

**சர்வதேச அங்கீகாரம்**

சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிந்துரைக்கும் 'தேசிய கணக்குகளின் அமைப்பு' (System of National Accounts - SNA) வழிகாட்டுதலின்படி இம்மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. உலக நாடுகள் அனைத்தும் ஒரே மாதிரியான அளவுகோலைப் பயன்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கம். இது இந்தியப் பொருளாதாரத்தை உலக நாடுகளுடன் ஒப்பிடவும், சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறவும் உதவும். இத்தகைய மேம்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்கள் புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், எதிர்கால வளர்ச்சித் திட்டங்களைத் துல்லியமாகத் திட்டமிடுவதற்கும் வலுவான அடித்தளமாக அமையும்.

rajanpalanikumar.a@hindutamil.co.in

நான்காவது தொழில் புரட்சியின் அச்சாணிகளாக ரோபோக்களும், செயற்கை நுண்ணறிவும் (AI) விஸ்வரூபம் எடுத்துள்ளன. இந்தியாவின் எதிர்காலப் பொருளாதாரக் கொள்கைகளில் ஏஐ தொழில்நுட்பம் முன்னெப்போதும் இல்லாத முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. சமீபத்தில் டெல்லியில் நடந்து முடிந்த 'இந்தியா ஏஐ இம்பாக்ட் 2026' உச்சி மாநாடு, இந்தியாவின் டிஜிட்டல் அதிகாரத்தை உலகிற்குப் பறைசாற்றியுள்ளது. இருப்பினும், இது சாமானிய மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்னும் எத்தகைய அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது விவாதத்துக்குரியதாகவே உள்ளது.

**பொருளாதாரக் கனவும்**
**உச்சி மாநாட்டு முடிவுகளும்**

மத்திய அமைச்சரவை 2024 மார்ச் மாதம் ₹10,371.92 கோடி மதிப்பீட்டில் 'இந்தியா ஏஐ மிஷன்' திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. இதன் தொடர்ச்சியாக நடந்த உச்சி மாநாட்டில், 2035-ம் ஆண்டுக்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 500 முதல் 600 பில்லியன் டாலர்களை ஏஐ தொழில்நுட்பம் கூடுதலாகச் சேர்க்கும் என்ற நிதி ஆயோக்கின் இலக்கு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

மாநாட்டின் முக்கிய முடிவாக, 'AI for All' (அனைவருக்குமான ஏஐ) என்ற இலக்கின் கீழ், இந்திய மொழிகளுக்கான பிரத்யேக ஏஐ மாதிரிகளை (பாஷினி போன்ற திட்டங்கள்) உருவாக்கவும், விவசாயம் மற்றும் சுகாதாரத் துறையில் ஏஐ பயன்பாட்டை அதிகரிக்கவும் பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

**தொழில்நுட்ப ஜாம்பவான்களின் 'பனிப்போர்':**



இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி, ஒரு பெண்ணை மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை போலீசார் கைது செய்ய முடியாது. அவசியமெனில், நீதிபதியின் சிறப்பு அனுமதி பெற்று மட்டுமே கைது செய்ய முடியும்.




பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் 2007 (Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007) என்பது வெறும் காகிதத்திலிருக்கும் சட்டம் மட்டுமல்ல; கைவிடப்பட்ட பல முதியவர்களின் வாழ்வில் ஒளியேற்ற உதவும் ஒரு மிகச் சிறந்த ஆயுதம் எனலாம்.

இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி துயரங்களிலிருந்து மீண்ட முதியவர் ஒருவரின் கதை இது.

கடும் உழைப்பாளியான சிவசாமிக்கு 72 வயது. அவரது ஒரே மகன் ரமேஷ். பெரும் விவசாயியான சிவசாமி, வாழ்நாள் முழுவதும் தனது நிலத்தில் கடுமையாக உழைத்து, பெரும் சொத்து சேர்த்து வைத்திருந்தார். தன்னுடைய மகனை நன்றாகப் படிக்க வைத்த அவர், ஒரு நல்ல நிறுவனத்தில் வேலைக்கு சேர்த்துவிட்டு, திருமணமும் செய்து வைத்தார்.

மகன் மற்றும் மருமகளின் அன்பை எதிர்பார்த்து, தனது பெயரில் இருந்த வீடு, நிலம், சேமிப்புப் பணம் என அனைத்தையும் மகனின் பெயருக்கு எழுதி வைத்தார் சிவசாமி. ஆனால், சொத்து கைக்கு வந்த சில மாதங்களிலேயே ரமேஷின் போக்கில் மாற்றம் தெரிந்தது. சிவசாமிக்கு உரிய நேரத்தில் உணவு வழங்கப்படவில்லை, மருந்துவாங்கப் பணம் தர மறுக்கப்பட்டது. ஒரு கட்டத்தில், "வீடு என் பெயரில் இருக்கிறது, நீங்கள் முதியோர் இல்லத்திற்குச் செல்லுங்கள்" என்று கூறி சிவசாமியை வீட்டை விட்டு வெளியேற்றினான் ரமேஷ்.

தெருவில் நின்ற சிவசாமிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்போது தான் ஒரு வழக்கறிஞர் மூலம் 'பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்புச் சட்டம், 2007' பற்றி அவருக்கு தெரிய வந்தது.

சிவசாமி வருவாய் கோட்டாட்சியர் (RDO) தலைமையிலான பராமரிப்புத் தீர்ப்பாயத்தில் புகார் அளித்தார். அவரது புகாரை விசாரித்த தீர்ப்பாயம், மகனிடம் போதிய வருமானம் இருந்ததால், சிவசாமிக்கு மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையை பராமரிப்புச் செலவுக்காக வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது. மேலும், தன்னை நன்றாகக் கவனித்துக் கொள்வான் என்ற நம்பிக்கையில்தான் சிவசாமி தனது சொத்தை மகனுக்கு எழுதிக் கொடுத்தார். ஆனால் மகன் கவனித்துக் கொள்ளவில்லை என்பது நிரூபணம் ஆனதால், அந்தச் சொத்து மாற்றத்தை 'செல்லாது' என்று தீர்ப்பாயம் அறிவித்தது. இதன் மூலம் தன் மகனிடம் இழந்த சொத்து முழுவதையும் சிவசாமி மீண்டும் தன் வசப்படுத்தினார்.

**எளிமையான நடைமுறை**

பாதிக்கப்பட்ட முதியவர்கள் இச்சட்டத்தின் கீழ் புகார் அளிக்க வழக்கறிஞர்கள் தேவையில்லை. பாதிக்கப்பட்ட முதியவரே நேரடியாகவோ அல்லது ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். 90 நாட்களுக்குள் இந்த புகார் மனு மீது தீர்வு காணப்பட வேண்டும்.

**பொதுமக்கள் அறிய வேண்டியவை**

60 வயது பூர்த்தியான பெற்றோர் (தத்தெடுத்த பெற்றோர் உட்பட) மற்றும் தங்கள் வாரிசுகளிடம் இருந்து பராமரிப்பு கோரும் முதியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வாரிசுகள் (மகன், மகள், பேரன், பேத்தி), வாரிசுகள் இல்லாத பட்சத்தில், முதியவரின் சொத்து யாருக்கு சேரப்போகிறதோ அந்த உறவினர்கள் முதியவரைப் பராமரிக்கக் கடமைப்பட்டவர்கள். குடும்பத்திலுள்ள முதியவர்களைப் பராமரிக்கத் தவறுவது அல்லது அவர்களைக் கைவிடுவது தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இதற்கு அபராதம் மற்றும் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.



**அடிப்படை உரிமை**

உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ வசதி என்பது ஒவ்வொரு முதியவரின் அடிப்படை உரிமை. சமூகம் முன்னேறிக் கொண்டிருந்தாலும், தனிக்குடும்ப மோகத்தால் குடும்பத்தில் உள்ள முதியவர்கள் பாரமாகக் கருதப்பட்டு, அவர்கள் விரட்டி அடிக்கப்படுகின்றனர். 'தாம் பெற்ற பிள்ளைக்கு எதிராகப் புகார் அளிப்பதா?' என்ற முதியவர்களின் தயக்கத்தை பலவீனமாகக் கருதி, பலர் தங்கள் குடும்பத்து முதியவர்களைத் துயரத்தில் தள்ளுகிறார்கள்.

ஆனால், சொத்துக்களை பிள்ளைகளுக்கு எழுதி வைக்கும் முன்பே, "என்னை இறுதிவரை பராமரிக்க வேண்டும்" என்ற நிபந்தனையை பத்திரத்தில் சேர்ப்பது சட்டப்படி அவர்களுக்குப் பாதுகாப்பைத் தரும். ஒருவேளை அப்படிச் சேர்க்காவிட்டாலும், இச்சட்டம் அவர்களுக்குத் துணை நிற்கும்.

சிவசாமியின் கதையில், அவர் சட்டத்தின் உதவியோடு தனது சொத்தை மீட்டெடுத்தார். ஆனால் சட்டம் என்பது கடைசி ஆயுதமே. அன்பு இருக்கும் இடத்தில் சட்டத்திற்கு வேலையில்லை. இருப்பினும், உரிமைகள் மறுக்கப்படும்போது மௌனமாக இருப்பதை விட, சட்டத்தை அணுகுவதே சிறந்தது.